# அரசுப் பள்ளிகளில் உட் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

**புதிய பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் (தொடக்க நிலை மற்றும் உயர் நிலை)**

பள்ளி அணுகல் என்பது வெறும் பள்ளியை உருவாக்குவதோடு நின்றுவிடாமல், குழந்தைகள் பள்ளிக்கு வருவதை கவரும் விதமாகவும், அப்பள்ளியில் முழு கல்வியினை முடித்திடவும் ஏதுவாக பள்ளிக்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட தேவை உள்ளது. எனவே, வகுப்பறைகள், போதுமான இயங்கும் நிலையில் கழிவறைகள், குடிநீர் வசதி, சாய்வு தளம் போன்றவை வழங்கப்பட வேண்டியுள்ளது.

**விரிவான நோக்கங்கள் :**

- முன்பருவக்கல்வி முதல் மேல் நிலைக் கல்வி வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் சமூகப் பொருளாதார பாலின இடைவெளியைக் குறைத்து பள்ளி வருகையினை உறுதி செய்வதும், சிறந்த தரமான கல்வியை வழங்குவதும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதின் வாயிலாக குழந்தைகளுக்கு பள்ளியில் மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்துவதுடன் பள்ளி வருகையையும், மாணவர்களின் கற்றல் அடைவுத் திறனையும் மேம்படுத்தும்.
- பள்ளிகளின் கட்டமைக்கப்பட்ட சூழல் கற்றல் கற்பித்தல் நிகழ்வுகளை மேம்படுத்த வழிவகுக்கிறது.

**பள்ளிக் கட்டமைப்பினை ஏற்படுத்தும் முறைகள் மற்றும் விதிகள் :**

தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை பொருத்த வரையில், அனைத்து கட்டடப் பணிகளும் சமுதாய பங்கேற்போடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளிகளின் உட்கட்டமைப்பு மேம்படுத்துதல் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் சமுதாய பங்களிப்புடன் பள்ளி மேலாண்மைக் குழு வாயிலாக திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதல் கட்டாயமாகும். மதிப்பீட்டுத் தொகை ரூ. 30.00 இலட்சம் வரையிலான அனைத்து கட்டடப் பணிகளும் பள்ளி மேலாண்மைக் குழு வாயிலாக மேற்கொள்ளப்படும்.

உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை பொருத்த வரையில், அனைத்து கட்டடப் பணிகளும் பள்ளி மேலாண்மைக்குழு, தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற்றும் பிற அரசுத்துறை நிறுவனங்கள் வாயிலாக மேற்கொள்ளப்படும்.

| உட்கட்டமைப்பு வசதிகள் (உயர்நிலை மற்றும் மேல்நிலை) | உட்கட்டமைப்பு வசதிகள் (தொடக்க மற்றும் நடுநிலை) |
|---|---|
| 1. நடுநிலைப்பள்ளியிலிருந்து உயர்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள்<br>2. உயர்நிலைப்பள்ளியிலிருந்து மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள்<br>3. கூடுதல் வகுப்பறைகள்<br>4. அறிவியல் ஆய்வகம்<br>5. கலை மற்றும் கைவினை அறை<br>6. நூலகம்<br>7. கணினி அறை<br>8. மாணவர்களுக்கான கழிப்பறைகள்<br>9. மாணவிகளுக்கான கழிப்பறைகள்<br>10. மாற்றுத் திறன் மாணவர்களுக்கான கழிப்பறைகள்<br>11. பழுது பார்த்தல் பணிகள்<br>12. குடிநீர் வசதி<br>13. சூரிய ஒளி மின்சக்தி தகடுகள் | 1. வட்டார வள மையக்கட்டடம்<br>2. பள்ளி தொகுப்பு கருத்தாய்வு மையக்கட்டடம்<br>3. புதிய தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள்<br>4. புதிய நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள்<br>5. கூடுதல் வகுப்பறைகள்<br>6. தலைமை ஆசிரியர் அறை<br>7. மாணவர்களுக்கான கழிப்பறைகள்<br>8. மாணவிகளுக்கான தனிக் கழிப்பறைகள்<br>9. மாற்றுத் திறன் மாணவர்களுக்கான கழிப்பறைகள்<br>10. குடிநீர் வசதி<br>11. சுற்றுச் சுவர்<br>12. சாய்வு தளம்<br>13. மின்சார வசதி<br>14. சமையலறைக் கட்டடம்<br>15. விளையாட்டு பொருட்கள்<br>16. பாலா செயல்பாடுகள்<br>17. பள்ளி முழு மேம்பாட்டுத் திட்டம்<br>18. பழுது பார்த்தல் பணிகள்<br>19. சூரிய ஒளி மின்சக்தி தகடுகள் |

**<u>எதிர்பார்க்கப்படும் விளைவுகள்:</u>**

எந்தவொரு உட்கட்டமைப்பு திட்டத்திலும் பள்ளி மற்றும் சமூக ஈடுபாடு உள்ளூர் உரிமையை அதிகரிக்கிறது. முறையான திட்டமிடல் உள்ளூர் தேவையினை அறிந்து பூர்த்தி செய்ய உதவுகிறது. மேலும், பணி முறையாக நடைபெறுவதை மேற்பார்வையிடுவதோடு நன்கு பராமரிப்பு செய்திடவும் ஊக்குவிக்கிறது. மேலும், உட்கட்டமைப்பு வசதிகள் பள்ளி வருகையினை உயர்த்துவதுடன் உள்ளூர் கல்வி அறிவு விகிதங்களை மேம்படுத்த உந்துதலாகிறது.

**<u>முக்கிய செயல் திறன் குறிகாட்டிகள்:</u>**

- அனைத்து அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் குடிநீர் வசதி, கைப்பிடியுடன் கூடிய சாய்வு தளம் மற்றும் செயல்படும் வகையில் மாணவ மாணவியருக்கென

கழிப்பறைகள், சுற்றுச் சுவர் மற்றும் கைகழுவும் அமைப்பு போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டும்.

- அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நூலக அறை, குடிநீர் வசதி, கைப்பிடியுடன் கூடிய சாய்வு தளம், செயல்படும் வகையில் மாணவ மாணவியருக்கென கழிப்பறைகள், சுற்றுச் சுவர் மற்றும் கைகழுவும் அமைப்பு போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டும்.
- அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அதிகமான மாணவர்களை உள்ளடக்கிய வகுப்பறைகள், பயன்படுத்தப்படாத வகுப்பறைகள், பயன்பாட்டில் இல்லாத வகுப்பறைகளின் சதவீதம்.
- அனைத்து வகையான அரசுப் பள்ளிகளில் மொத்த மாணவர்கள்/மாணவியர்கள் சேர்க்கை மற்றும் மொத்த மாணவர்கள்/மாணவியர்களுக்கான கழிப்பறைகளின் விகிதாச்சாரம்.

**<u>செயல் திறன் குறிகாட்டிகள்கண்காணிப்பு:</u>**

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் மாவட்ட மற்றும் வட்டாரப் பொறியாளர்கள் அரசுப் பள்ளிகளில் மேற்குறிப்பிட்ட செயல் திறன் குறிகாட்டிகள் அனைத்தையும் கண்காணித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்பட்டுள்ள இடைவெளியினை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்திட வேண்டும். இதன் அறிக்கை கல்வி மேலாண்மைத் தகவல் முகமை வாயிலாக உருவாக்கப்பட்டு, பள்ளி மேலாண்மைக்குழு / பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்பு / அரசுத்துறை நிறுவனங்கள் மற்றம் பிற துறை வாயிலாகவும் உட்கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இடைவெளியினை குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**<u>2021 – 2022 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு:</u>**

| தொடக்கநிலை | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | பணிகள் | எண்ணிக்கை | அலகுத்தொகை | மொத்தம் (ரூ. இலட்சத்தில்) |
| 1 | மாணவர்களுக்கான கழிப்பறைகள் | 115 | 3.00 | 345.00 |
| 2 | மாணவியர்களுக்கான கழிப்பறைகள் | 51 | 3.1 | 158.1 |
| 3 | மாற்றுத் திறன் மாணவர்களுக்கான கழிப்பறைகள் | 446 | 1.8 | 802.8 |
| | **மொத்தம்** | | | **1305.90** |

| உயர்நிலை மற்றும் மேல்நிலை | | | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **பணிகள்** | **எண்ணிக்கை** | **அலகுத்தொகை** | **மொத்தம் (ரூ. இலட்சத்தில்)** |
| 1 | மாணவர்களுக்கான கழிப்பறைகள் | 50 | 4.1 | 205.00 |
| 2 | மாணவியர்களுக்கான கழிப்பறைகள் | 259 | 4.1 | 1061.90 |
| 3 | மாற்றுத் திறன் மாணவர்களுக்கான கழிப்பறைகள் | 451 | 1.8 | 811.8 |
| | | | **மொத்தம்** | **2078.70** |

| தரம் உயர்த்தப்பட்ட உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **வ.எண்** | **பணிகள்** | **எண்ணிக்கை** | **அலகுத்தொகை** | **மொத்தம் (ரூ. இலட்சத்தில்)** |
| 1 | உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் | 6 | 94.71 | 568.26 |
| | | | **மொத்தம்** | **568.26** |
| | **மொத்தம் 2021 – 2022 (தொடக்கநிலை + மேல்நிலை + உண்டு உறைவிடப் பள்ளி)** | | | **3952.86** |

**<u>பயனாளிகள்:</u>**

அனைத்து அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள்

# வட்டார வள மையம்



## கூடுதல் வகுப்பறை




## கைப்பிடியுடன் கூடிய சாய்வு தளம்



## கழிப்பறைகள்






# தரம் உயர்த்தப்பட்ட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்





அரசு உயர்நிலை பள்ளி, அகரம், தருமபுரி மாவட்டம்





பி.எம்.எஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.